**பலபிட்டிய பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, பலபிட்டிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது

(அ) குப்பை முகாமைத்துவ செயற்திட்டத்திட்டத்திற்காக ரூபா 78,000 இற்காக கொள்வனவு செய்திருந்த 10 அறிவித்தல் பலகைகளை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்காமையால் நிலையான சொத்துக்கள் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) வருட இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஒய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 6,904,942 இற்கான பங்களிப்புத் தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால் நடைமுறை பொறுப்புக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 46,248,459 தொகைக்கான கணக்கு விடயங்கள் தொடர்பான மீதி அதனோடு தொடர்புடைய 12 துணைப் பதிவேடுகளில் காணப்படும் மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 9,853,657 தொகைக்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 05 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 86,082,612 தொகையாக இருந்ததுடன், அதில் அடங்கியுள்ள 2008 ஆண்டிற்கான கூட்டுத் தொகை ரூபா 5,375,414 தொகைக்கான முத்திரை கட்டணக் கொடுப்பனவினைத் தீர்த்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 07 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,153,167 தொகையாக காணப்பட்டதுடன், அந்த மீதியில் 2013-2015 இடைப்பட்ட காலப்பகுதிக்கான கூட்டுத்தொகை ரூபா 181,170 தொகையாகிய பதவியணிக்கு செலுத்த வேண்டிய முத்திரை கட்டண கொடுப்பனவினைத் தீர்த்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 16,143,377 தொகைக்கான காணிகள் மற்றும் கட்டிடங்கள், பொறியும் பொறித்தொகுதியும் உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள், தளபாடங்கள் தொடர்பாக நாளது வரை ஆக்கப்பட்ட வகுப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணைகளும் கூட்டுத் தொகை ரூபா 13,571,279 தொகைக்கான திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132 | கருமங்களின் கீழ் அடங்காத பிரதேச சபையின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொண்ட சுற்றுலா ஒன்றிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 300,000 வழங்கியிருந்தது. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 261(3) | i. காசேட்டில் மீதியொன்று காணப்படாத போதும் ரூபா 867,561 தொகை பெறுமதியின் 14 காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| நிதிப்பிரமாணங்கள் 570 மற்றும் 571(1)(2) | ii. 02 வருடங்கள் மிகையான கூட்டுத்தொகை ரூபா 8,324,999 தொகைக்கான 354 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 44,118,884 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 28,466,919 தொகையாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வண்டின் நிதி விளைவுகளில் ரூபா 15,651,965 இற்கான வளர்ச்சி ஒன்றை காட்டியது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

கடந்த வருடங்களின் நிலைமைகளுடன் மீளாய்வாண்டின் நிலைமை இணக்கம் செய்த போது நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்களில் பொதுவான நிலைமையொன்று காணப்பட்டதுடன், பெற வேண்டிய கணக்குகளின் கீழ் 08 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 5,375,418 தொகை காணப்பட்டமையால் விகிதாசாரங்களின் மூலம் காட்டப்பட்டுள்ள முறையில் திரவத்தன்மை ஒன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வீதவரி

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 11,446,255 இற்கான நிலுவையில் மற்றும் ரூபா 4,030,732 இற்கான சிட்டை இட்டவைகளில் 27 சதவீதத்தில் மாத்திரம் ஆண்டின் போது அறவிடப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 11,284,215 தொகை அளவான பெறுமதியொன்று காணப்பட்டது.

#### 2.3.2 வாடகை

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,147,907 இற்கான நிலுவைத் தொகையில் மற்றும் ரூபா 159,600 இற்கான சிட்டையிடல்களில் 12 சதவீதம் மாத்திரம் ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 1,147,839 தொகையான கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தது.

#### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலகர் இடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 71,854,145 தொகை முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 1,608,633 இற்கான நீதிமன்றத் தண்டப் பணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

#### (அ) பதவியணி முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் பிரதீயிட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 06 ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 1,853,125 இற்காக செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) பதவியணி திட்டத்தில் அங்கீரிக்கப்பட்டிருந்த 08 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதே போலவே மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) முறையான இடமாற்ற நடைமுறையொன்றினைக் கடையிடிக்காமையால் சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இடையறாது 20 வருடங்கள் 15 வருடங்களிடையே சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

**(ஆ) பதவியணிக் கடன்**

கூட்டுத்தொகை ரூபா 102,764 தொகைக்கான பதவியணிக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு திறமையின்மை**

சபையினால் பேணப்படும் 04 வங்கிக் கணக்குகளில் மீளாய்வாண்டின் போது காணப்பட்ட சராசரி மீதி ரூபா 3,089,767 தொகையாக காணப்பட்ட போதிலும் அந்த மிகை பணத்தை முதலீடு செய்து மேலதிக வருமானம் ஒன்றினை உழைத்தல் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**3.3 திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவம்**

சபையின் அதிகார பிரதேசத்தில் 60 சதவீதத்தை அணவல் செய்யக் கூடிய விதமாக திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவ விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குப்பைகளை வகைப்படுத்திய பெற்றிருக்கவில்லை. சேகரிக்கப்படும் குப்பைகளை மாது கங்கைளின் கிளை ஆறு ஒன்றினை சேர்ந்த பிரதேசத்தில் தனியார் காணி ஒன்றில் முறைசாராத விதமாக குவிக்கப்படுவதினால் பொது மக்களின் சுகாதாரத்திற்கு தாக்கம் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. குப்பைகளை குவிக்கப்படும் காணிக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெற்றிருக்கவில்லை.

**4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் காணப்படும் 07 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 18,903,213 தொகைக்கான சேமிப்பும், ஒரு செலவு விடயத்தில் ரூபா 56,985 இற்கான பிரதிகூலமான முரண்களும் 05 வருமான விடயங்களில் ரூபா 8,806,746 இற்கான நெருங்கி இருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுபாடுக் கருவி ஒன்றாக பயன்படுத்தபடவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/நா.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) சொத்துக்கள் வகுப்பு அடிப்படையில் சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.<br>(ii) சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.<br>(iii) சபைக்குச் சொந்தமான சனசமூக மண்டபங்கள், மயானங்கள் மற்றும் பொது இடங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பணியாளர் குழு முகாமைத்துவம் | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கும், மிகை ஊழியர்களை முறைப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) வருமான நிருவாகம் | (i) நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தி யிருக்கவில்லை.<br>(ii) நிலுவை வருமான வரி மற்றும் வாடகை அறவீடு செய்வதற்கு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(iii) வரி அறவீடு செய்யக்கூடிய நிறுவனங்களிலிருந்து குப்பை வரி அறவீடு செய்திருக்கவில்லை.<br>(iv) மிகைப் பணத்தை முதலீடு செய்து மேலதிக வருமானம் உழைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணல் | (i) | முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டுவரப்படும் கணக்கு மீதிகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய அட்டவணைகளில் காணப்படும் மீதிகளிடையே இருக்கும் வித்தியாசங்களை சரி செய்திருக்கவில்லை. |
| | | (iii) | கணக்கு மீதிகள் குறைவாகவும் மிகையாகவும் காட்டப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ஈ) | முகாமைத்துவ பலவீனங்கள் | (i) | நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | இடமாற்றம் செய்யப்படாமல் 15 வருடங்கள் முதல் 20 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமப் பதவியணி அங்கத்தவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |